சுருக்கம்

தொழில்நுட்ப அனுமதி – உயர்நிலைக் குழு பரிந்துரையை ஏற்று உள்ளாட்சி அமைப்புகளில் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பினை உயர்த்தி ஆணைகள் வெளியிடல்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (ப) எண்.38 நாள் : 30.01.2008

படிக்க:

1. அரசாணை (ப) எண்.309, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 02.06.2000
2. உயர்நிலைக்குழு அறிக்கை 2007 பரிந்துரை எண்.17

-----

**ஆணை :**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பான தொழில் நுட்ப அனுமதி வழங்குவதற்கான அதிகார வரம்பை பின்வருமாறு உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டன.

| வரிசை எண். (1) | பதவி நிலை (2) | தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம் (3) | |
|---|---|---|---|
| | | தற்போதுள்ள வரம்பு | உயர்த்தப்படும் வரம்பு |
| 1 | நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக கண்காணிப்புப் பொறியாளர் | பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரின் அதிகார வரம்பு | மாற்றம் ஏதும் இல்லை |
| 2 | மாநகராட்சிகளின் நகரப் பொறியாளர் | ரூ.25 இலட்சம் | ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) |

| | | | |
|---|---|---|---|
| 3 | மண்டல செயற்பொறியாளர் /நகராட்சிப் பொறியாளர்– நிலை–1/செயற் பொறியாளர் | ரூ.10 இலட்சம் | ரூ.30 இலட்சம்(ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) |
| 4 | நகராட்சிப் பொறியாளர் – நிலை–2/உதவி செயற் பொறியாளர் | ரூ.5 இலட்சம் | ரூ.15 இலட்சம்(ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) |
| 5 | நகராட்சிப் பொறியாளர்கள் நிலை –3 | ரூ.1 இலட்சம் | ரூ.5 இலட்சம்(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) |

2. தற்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வளர்ச்சிப் பணிகளுக்கு தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகாரம் குறைந்த அளவிலேயே உள்ளது எனவும், இவ்வரம்புகள் ஏழு ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டன எனவும், எனவே, அனுமதி வழங்கும் வரம்பை பின்வருமாறு மாற்றி அமைக்கலாம் எனவும், மாநில மூன்றாவது நிதி ஆணையத்தாலும் நகராட்சி நிர்வாக ஆணையராலும் பின்வருமாறு பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும் உயர்நிலைக் குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

| வ. எண். | அலுவலர் | மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரை | நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | ………… | பொதுப்பணித் துறை தலைமை பொறியாளருக்குள்ள அதிகாரம் |
| 2. | மாநகரப் பொறியாளர் (சென்னை தவிர பிற மாநகராட்சிகள் | ………… | ரூ.50 இலட்சம் வரை |
| 3. | மண்டல செயற் பொறியாளர் | ரூ.50 இலட்சம் வரை | ரூ.50 இலட்சம் வரை |
| 4. | செயற்பொறியாளர்/ நகராட்சி பொறியாளர் நிலை–1 | ………… | ரூ.40 இலட்சம் வரை |
| 5. | உதவி செயற்பொறியாளர்/ நகராட்சிப் பொறியாளர் நிலை–2 | ………… | ரூ.30 இலட்சம் வரை |
| 6. | உதவிப் பொறியாளர்/ நகராட்சிப் பொறியாளர் நிலை–3 | ………… | ரூ.20 இலட்சம் வரை |

3. மேலும் மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில், நகராட்சிகளின் பணிகளுக்கான நிர்வாக ஒப்பளிப்பு வழங்குவதற்கான உச்சவரம்பை உயர்த்த உத்தேசித்துள்ளதைக் கருத்திற்கொண்டு, அதே மாநகராட்சி மன்றங்களுக்கு அனுமதி வழங்கும் வரம்பைத் திருத்தியமைக்கலாம் எனவும் மாநில மூன்றாவது நிதி ஆணையம் பரிந்துரைத்துள்ளது என உயர்நிலைக் குழு குறிப்பிட்டுள்ளது.

4. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பெருமதிப்பிலான திட்டங்களை செயல்படுத்துவது, கட்டுமானப் பொருள்கள் மற்றும் பொதுவான விலையேற்றம், வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கம் துரிதப்படுத்தப்படுதல் ஆகிய காரணங்களின் அடிப்படையிலும், மேற்சொன்ன அதிகார வரம்புகள் 7 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்ட நிலையிலும், மாநில மூன்றாவது நிதி ஆணையத்தின் பரிந்துரை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் பரிந்துரையின் அடிப்படையில் தொழில்நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பை கீழ்க்காணும் வகையில் திருத்தி அமைக்கலாம் என உயர்நிலைக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது.

| வரிசை எண். | அலுவலர் | தற்போதுள்ள தொழில்நுட்ப அனுமதி வரம்பு | உயர்த்தப் பரிந்துரை செய்துள்ள வரம்பு |
|---|---|---|---|
| 1. | கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் | பொதுப்பணித்துறை தலைமை பொறியாளருக்குள்ள அதிகாரம் | பொதுப்பணித்துறை தலைமை பொறியாளருக்குள்ள அதிகாரம் |
| 2. | மாநகரப் பொறியாளர் (சென்னை தவிர பிற மாநகராட்சிகள்) | ரூ.50 இலட்சம் வரை | ரூ.75 இலட்சம் வரை |
| 3. | மண்டல செயற்பொறியாளர் | ரூ.30 இலட்சம் வரை | ரூ.50 இலட்சம் வரை |
| 4. | செயற்பொறியாளர்/ நகராட்சிப் பொறியாளர் நிலை–1 | ரூ.30 இலட்சம் வரை | ரூ.40 இலட்சம் வரை |
| 5. | உதவி செயற்பொறியாளர்/ நகராட்சிப் பொறியாளர் நிலை–2 | ரூ.15 இலட்சம் வரை | ரூ.25 இலட்சம் வரை |
| 6. | உதவி பொறியாளர்/ நகராட்சிப் பொறியாளர் நிலை–3 | ரூ.5 இலட்சம் வரை | ரூ. 10 இலட்சம் வரை |

5. எனவே, மேற்குறித்த உயர்நிலைக் குழுவின் பரிந்துரைகளை அரசு கவனமுடன் ஆராய்ந்து அதனை ஏற்று அவ்வாறே ஆணையிடுகிறது.

6. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.77/ FS/P/08 நாள் 08.01.2008-ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5
தலைமைப் பொறியாளர் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணி, சென்னை-5.
தலைமைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை) சென்னை-5
இயக்குநர், உள்ளாட்சி நிதிக் கணக்குகள், சென்னை -108.
மாநில கணக்காயர், சென்னை - 600 018.
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்
(சென்னை மாநகராட்சியைத் தவிர)
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை -108
நகல்
நிதித்துறை, சென்னை -9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந2/பொது)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
31/1/08